# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.134/2019 |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.செல்வம் |
| Father's/Husband Name: | | திரு.பாண்டியன் |
| Village | : | பிலிமிசை |
| Taluk | : | ஆலத்தூர் |
| Age | : | 45 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.03.2023

**முதல் விசாரணை :-**

01. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் 2ம் எதிரியை தெரியும். 21.07.2017ம் தேதி பென்னகோணத்திற்கு சென்றுவிட்டு வடக்கலூர் வரை பேருந்தில் வந்து இறங்கி நடந்து வந்து கொண்டு இருக்கும் போது மாலை சுமார் 05.45 மணிக்கு என் பின்னால் இரு நபர்கள் வண்டியில் வந்து கொண்டு இருந்தார்கள்.

02. ஒரு ஆள் வண்டியிலும், ஒரு ஆள் நடந்து வந்துகொண்டு இருந்தார். ஏன் பின்னால் வருகிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் 2ம் எதிரி என் கழுத்தில் இருந்த தாலிகொடியை இழுத்து கழற்றிவிட்டார். பின்னர் இருவரும் ஓடிவிட்டார்கள். நான் கத்திக்கொண்டு இருந்தேன். அப்போது பென்னகோணத்தில் இருந்து என் உறவுகாரர் ராமலிங்கம் வந்து கொண்டு இருந்தார். அவர் என்னவென்று கேட்டதற்கு நான் சங்கிலியை பறித்து சென்றுவிட்டார் என்று சொன்னேன். 23.07.2017ம் தேதி சம்பவம் தொடர்பாக புகார் அளித்தேன். அந்த தாலிகொடியோடு தாலி, குண்டு, காசு, மாங்காய் ஆகியவை கோர்க்கப்பட்டு இருந்தது.

03. இரண்டு வருடம் கழித்து போலீசார் என் நகை கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். என் நகையை காவல் நிலையத்திற்கு சென்ற அடையாளம் காட்டினேன். பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து இடைகால பொறுப்பில் நகையை பெற்று சென்றேன்.

என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் அளித்தது தான். (**அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆகும்**). என்னிடம் காட்டப்படும் சிடியுடன் கூடிய புகைப்படத்தில் உள்ள நகைகள் நான் இடைகால பொறுப்பில் பெற்று சென்ற என்னுடைய நகைகள் தான். (**அந்த சிடியுடன் கூடிய புகைபடம் அ.சா.பொ.1 ஆகும்**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

01. சம்பவம் நடந்தது 21.07.2017 ம் தேதி என்றால் சரிதான். அன்றைய தினமே நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். 23.07.2017 அன்று தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். புகார் இரண்டு நாடகள் காலதாமதாமாக அளித்ததற்கான காரணத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாகனத்தின் பதிவு எண் மற்றும் என்ன வகையான வாகனம் என்பதை புகாரிலோ, 161 வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் 3,4 முறை விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

02. என்னை அழைத்து சென்று போலீசார் அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் நடத்தினார்கள். அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்ட தேதி, மாதம், வருடம் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஞாபகம் இல்லை. சாட்சி கொழுஞ்சி என் அண்ணன் என்றால் சரிதான்.

03. சாட்சி அறிவழகன் என் உறவினாரா என்றால் இல்லை. முதன் முதலாக நகையை எங்கு பார்த்தேன் என்றால் மங்களமேடு காவல் நிலையத்தில் பார்த்தேன். செயினை பறித்த சென்றவர்கள் என்ன உடை அணிந்திருந்தார்கள் என்று புகாரிலோ, 161 வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

04. நகையின் மதிப்பு ரூபாய் 80,000/- ஆயிரம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ரூ.70,000/- என்று குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வது போல் எந்த குற்றமும் செய்யவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக அவர்கள் சொல்லிகொடுத்தது போல் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.